## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

நாள் 28.07.2026
அசல் வழக்கு எண்.108/2022
பி.சா. 1. – , ஜெமினி த/பெ.வரதன் என்பவரை வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

4. எனது தம்பி ஆறுமுகம் 2016ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர் வழக்கு சொத்தில் நான்தான் பயிர் செய்து வந்தேன் என்றால் சரிதான். வாதிக்கு சொத்து பிரித்துக் கொடுக்காத நிலையில் ஆறுமுகத்திற்கு பாகம் கொடுத்தேனா என்றால் இல்லை. பயிர் சாகுபடி மூலமாக கிடைத்த வருமானத்தில் ஆறுமுகத்திற்கு பாகம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். வாதிக்கு வருமானத்தில் பாகம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி வருமானத்தை வைத்துதான் வாதிக்கு வேலைக்கு செல்வதற்கு ரூ.2,000/- பணம் கொடுத்துள்ளேன். மற்ற செலவினங்களுக்கும் பணம் கொடுத்துள்ளேன். அவ்வாறு பணம் கொடுத்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வாதி வங்கியில் எந்த வருடம் வேலைக்கு சென்றார் என்றால் வருடம் எனக்கு தெரியவில்லை. என்ன வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. வாதி 1993ல் வேலைக்கு சென்ற பின்னர் வாதிக்கு வருமானத்தில் பாகம் கொடுத்தேனா என்றால் செலவுக்கு பணம் கொடுத்தேன். வாதி சம்பளம் வாங்கி வந்து என்னிடம் கொடுப்பார். நான்தான் அனைத்து செலவுகளையும் பார்த்து வந்தேன். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1984 ஆகும். எனக்கு மாமியார் வீட்டிலிருந்து சீதன பொருட்கள் என்ன கொடுத்தார்கள் என்றால் திருமணத்தின்போது எதுவும் கொடுக்கவில்லை. கொஞ்சம் நகை எனது மனைவிக்கு கொடுத்தார்கள். பயிர் வைத்த நிலத்தை அதன் உரிமையாளர் விற்பதாக சொன்னதால் எனது மனைவி நகையை அவரது பெற்றோர் வீட்டில் கொடுத்து அதை வைத்து பணம் பெற்று இடத்தை வாங்கினோம். எனது எதிர் வழக்குரையில் எனது மாமியார் வீட்டில் நகைகளை கொடுத்து பணம் பெற்று இடம் வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் அதுபற்றி சொல்லி உள்ளேன்.

5. சீதனமாக கொடுத்த பணத்தை வைத்து பூசிவாக்கம் கிராமத்தில் இடத்தை வாங்கியுள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்றால் எங்கள் நகையை அவர்களிடம் கொடுத்துவிட்டோம். அவர்கள் பணத்தை அமிர்தவள்ளி மற்றும் நடராஜிடம்

கொடுத்து எனது பெயரில் இடத்தை வாங்கி கொடுத்துவிட்டார்கள். எங்களிடம் பணம் கொடுக்கவில்லை. எவ்வளவு நகை கொடுத்தேன் என்றால் அதுபற்றி எனக்கு குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. எனது மாமியார் வீட்டிலிருந்து எந்த சீதனமும் நகையாக கொடுக்கவில்லை என்றும் நான் அதை வைத்து பூசிவாக்கம் இடத்தை வாங்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் வாதி காதலித்து திருமணம் செய்து கொண்டதாகவும் வாதியின் மனைவி அவரை விட்டு சென்றுவிட்டதாகவும், அவரை நான்தான் பராமரித்து பாதுகாத்ததாக எதற்காக சொல்லி உள்ளேன் என்றால் நாங்கள் ஒன்றாக இருந்து வந்தோம் என்பதற்காக சொல்லி உள்ளேன். எனது தம்பி சம்பாதித்து வந்து எந்த வருடம் வரை பணம் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1992ம் வருடம் வரை பணம் கொடுத்துள்ளாரா என்றால் தெரியவில்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் சி செட்யூல் சொத்தில் ஒரு அயிட்ட சொத்தை விற்றுதான் நான் பூசிவாக்கம் கிராம சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. வாதி சம்பாதித்து தனிப்பட்ட சொத்து வாங்கும் அளவிற்கு அவரிடம் பணம் உள்ளது என்றால் சரிதான்.

6. பி.சா.ஆ.2 பட்டாவில் முருகேசன் பெயர் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ3 பட்டாவில் முருகேசன் பெயர் உள்ளது என்றால் சரிதான். பி.சா.4 பட்டா மௌலீஸ்வரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 முதல் 4 வரையான சொத்துக்கள் வாதி மற்றும் அவரது மகனின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வாதி சம்பாதித்து கொடுத்த பணத்தை வைத்து என்ன செய்தேன் என்றால் கழனி பூசிவாக்கத்தில் வாங்கினேன். 43 சென்ட் மற்றும் 23 சென்ட் இடம் வாங்கினேன். மேற்படி இடத்தில் வாதிக்கு பாகம் உள்ளது என்றால் அவரது பெயரில் 66 சென்ட் எழுதப்பட்டுள்ளது. சிகாமணி பாகப்பிரிவினையில் அதிகமாக சொத்து எழுதிக் கொண்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து அனைத்தும் எங்களது கூட்டு குடும்ப சொத்து என்றும் அதை நான் வாதி பாகத்தை தர மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது எதிர் வழக்குரையில் எனது திருமணத்தின்போது மாமியார் வீட்டில் இருந்து சீதனமாக பணம் கொடுத்ததாகவும் எனது முதல் விசாரணையில் தாய் வீட்டிலிருந்து பணம் கொடுத்ததாக மாற்றி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமியார் வீட்டில் கொடுத்த நகைகளை அவர்களிடம் கொடுத்து எனது பெயரில் இடம் வாங்கி கொடுத்தார்கள். ஊர் பஞ்சாயத்தில் 2021ல் பூசிவாக்க கிராம சர்வே எண்-86ல் உள்ள இடத்தில் வாதிக்கு பாகம் தருவதாக ஒப்புக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறான சங்கதிகளை

**சொல்கிறேன் என்றும், வாதிக்கு தாவா சொத்தில் பாகம் கிடைக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல.**

**மறு விசாரணை இல்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd.A.Mohamed Ali,
Additional Subordinate Judge,
Kancheepuram.